1994 மே 3]

அதைப் போல அந்த பஸ் ஸ்டாண்டை விரிவுபடுத்தினாலே போதும். ஏனென்றால் பெரிய அளவில் அதிகமான பண முதலீட்டில் அந்த பஸ் ஸ்டாண்டு விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. எனவே, டேமேஜாகி இருக்கிற காவல் துறை குடியிருப்பை வேறு இடத்திற்கு மாற்றம் செய்து, அந்த இடத்தையும் சேர்த்து பஸ் ஸ்டாண்டை விரிவுபடுத்த நம்முடைய உள்ளாட்சித் துறை மூலமாக மாற்று வழி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்து பற்றி ஆய்வுகள் மேற் கொள்ளபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 500, திரு. என். ஆர். ராஜேந்திரன் இருக்கையில் இல்லை.

485—

திருமலைக்கவுண்டன்பாளையம், பேரநாயக்கன்புதூர் கிராமங்களுக்குப் பேருந்து வசதி ஏற்படுத்துதல்

*21519—டாக்டர் மு. சீனியம்மாள் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமலைக்கவுண்டன்பாளையம், பேரநாயக்கன் புதூர் ஆகிய கிராமங்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்த அரசு முயலுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர் :

(அ) திருமலைக்கவுண்டன்பாளையம், பேரநாயக்கன் புதூர் கிராமங்களுக்கு போதிய பேருந்து வசதி செய்யப்பட்டு இருக்கிறது.

(ஆ) இக்கேள்வி எழாது.